குறிப்பிடாமல், கடைசி நேரத்தில் டூட்டி கொடுக்கிற வாய்ப்பு பல நேரங்களில் இருப்பதாகப் புகார்கள் கூறப்படுகின்றன, எனவே குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே அவர்களுக்கு டூட்டி நேரத்தைக் கொடுத்துவிட்டால், அதையொட்டி அவர்கள் வாக்குப் பதிவு செய்ய வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க அன்பழகன்: தேர்தல் பணி கொடுக்கப்படுவது என்பது கட்டாயமான பணி, அது அரசாங்கத்தின் கட்டளை. வாக்குப் போடுவது என்பது அவரவருடைய உரிமை என்ற காரணத்தால், அந்த உரிமையைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. எந்தத் தேதியில் தேர்தல் பணி ஆணை பிறப்பிக்கப்படுகிறதோ, அந்தத் தேதியில் முன்னதாகவே குறிப்பிட்ட தொகுதியின் தேர்தல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்து தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யலாம். தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றும் இடம் தங்கள் தொகுதிக்குள்ளேயே இருந்தால் அவர் பணியாற்றுகிற இடத்திலேயே வாக்களிக்க முடியும், வேறு தொகுதியில் பணியாற்றுகிற நிலைமை ஏற்பட்டால் அந்த வாக்குச்சீட்டைத் தபால் மூலமாக அனுப்பவாய்ப்பு இருக்கிறது. அதை மனு மூலமாகப் பெற்றுக்கொள்ளவும் இடம் இருக்கிறது. வேறு குறைகள் இருந்தால் அதைக் கவனிக்கலாம்.

தாலுகா அமைத்தல்

*3027—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரவக்குறிச்சி, பரமத்தி ஒன்றியங்களை சேர்த்து ஒரு தனி தாலுகா ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

அரவக்குறிச்சி மற்றும் க. பரமத்தி ஒன்றியங்களை சேர்த்து புதிய அரவக்குறிச்சி வட்டம் ஏற்படுத்தும் பரிந்துரை அரசிடம் உள்ளது.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் பரிந்துரை உள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எவ்வளவு காலத்திற்குள் அது நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களைப் பிரித்து அமைக்கப்படுவது குறித்து பரிந்துரை செய்ய ஏற்படுத்தப்பட்ட வல்லுநர் குழு திருச்சி மாவட்டத்தைப் பிரித்து அமைப்பது குறித்த அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில் கரூர் வட்டத்தைப் பிரித்தமைத்து கே. பரமத்தி, அரவக்குறிசசி ஒன்றியங்களை ஏற்படுத்தி புதியதாக அரவக்குறிச்சி வட்டத்தை ஏற்படுத்தும் பரிந்துரை உள்ளது. திருச்சி மாவட்டத்தைப் பிரித்து அமைப்பது குறித்து 1990-91 ஆம்

ஆண்டில் எடுக்கலாம் என்று கருதப்பட்டுள்ளது. எனவே திருச்சி மாவட்டதைப் பிரித்து அமைப்பது சம்பந்தமான முடிவைக் குழு எடுக்கும்போது புதிய அரவக்குறிச்சி வட்டம் ஏற்படுத்துவது குறித்தும் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்த எந்த வட்டங்களைப் பிரிக்க அரசு ஆய்வு செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வட்டங்களைப் பிரிக்கிற பிரச்சினை எதுவும் இல்லை. மாவட்டங்களைப் பிரிக்கும் பிரச்சினை அரசின் முன்னால் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெகு நாட்களுக்கு முன்பு பெரிய வட்டங்களாக அமைந்து விட்ட வட்டங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை எங்கெங்கிருந்து வந்திருக்கின்றது? அந்தக் கோரிக்கைகள் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாவட்டங்களைப் பிரித்து அமைத்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும் என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். அதுபற்றி அப்போது யோசிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கும் இந்த அவைக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(9–25 மணி)

திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

கோட்டாட்சி அலுவலகம் அமைத்தல்.

*3148 திரு. ஜி. பழனிச்சாமி:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் கோட்டாட்சி அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம, திருத்துறைப்பூண்டியில் கோட்டாட்சி அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ஜி. பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த அரசு திருத்துறைப்பூண்டியில் வருவாய்த்துறை

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS